# WORD OF CHRIST

# (கிறிஸ்துவின் வசனம்)


கொலோ 3:16

ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் | 11 கொரி 3:6 | மார்ச் 1993


வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!

இவ்விதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சத்தியங்களை அறிவிப்பதே எமது "கிறிஸ்துவின் வசன "பத்திரிக்கையின் நோக்கமாகும், கள்ள உபதேசத்தில் வீழ்த்திருப்பவர்களை மீட்டு எடுப்பதே இவ்விதழின் பணியாகும். வாசித்து பயன்பெறுங்கள். மற்றவர்களுக்கும் அறிமுகப் படுத்துங்கள். இவ்விதழ் உங்களுக்குத் தேவையில்லையென்றால் தயவு செய்து எமக்குத் தெரியப்படுத்துங்கள். வீண் அடிக்காதீர்கள். கர்த்தருடைய வசனத்தை உதாசினப்படுத்தாதீர்கள். இவ்விதழின் பக்க அளவினை அதிகரிக்க ஜெபித்துக்கொள்ளுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக! ஆமென்!

ஆசிரியர்

## GOD IS SPIRIT

### ( தேவன் ஆவியாயிருக்கிறார் )

RAT✓

என் அருமை சகோதரனே, சகோதரியே தேவன் ஆவியாயிருக்கிறார். அவரை தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று யோவான் எழுதின சுவிசேஷம் 4:24-ம் வசனத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்வதை வாசிக்கின்றோம். நீங்கள் அவரை ஆவியோடு தொழுது கொள்கின்றீர்களா அல்லது இவ்வுலகத்தில் உள்ள கல்லால் செய்யப்பட்ட சிலையை, மரத்தால் செய்யப்பட்ட விக்கிரகத்தை உங்களுக்காக உண்டு பண்ணி அதை நமஸ்கரிக்கிறீர்களா? பிரிய நண்பரே! தேவன் தம்மை ஆவியோடு தொழுது கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றார்.

உலகப்பிரகாரமான நமது தகப்பனார் உயிரோடு இருக்கும்பொழுது அவருக்கு ஒரு படத்தையோ, சிலையையோ வைத்து நினைவு கூறுவதில்லை. அப்படியிருக்கும்போது ஆதியும் அந்தமுமாயிருக்கின்ற

நமது ஜீவனுள்ள தேவனுக்கு ஒப்பாக எப்படி ஒரு உருவப் படத்தை வைக்கலாம். அநேகர் இப்படிச் சொன்னால் சுயமா ஞாபகத்திற்கு எங்கள் வீட்டில் வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நண்பரே! வேதம் என்ன சொல்லுகிறது. நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளினாலே தெய்வங்களையும், பொன்னாலோ தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம். யாத் 20;23 ல் கட்டளையாக சொல்லியிருக்கிறார். இப்படியிருக்க நீங்கள் அவருக்கு ஒப்பாக ஒரு சிலுவையை வைக்கிறீர்கள், அச்சடிக்கப்பட்ட காகித்தை அவருக்கு ஒப்பாக நினைக்கிறீர்கள் அல்லது வெள்ளியினாலே உங்களுக்கு விக்கிரகத்தை உண்டாக்குகிறீர்கள். பிரிய நண்பரே! ஏன் இப்படி தேவனுக்கு விரோதமாக செய்கிறீர்கள்?

ஆதியிலே தேவன் மண்ணான ஆதாமுக்கு ஜீவசுவாசத்தைக் கொடுத்தார். அந்த ஆவியில் அவன் தொழுது கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். சரீர பிரகாரமான தொழுகையல்ல ஆவிக்குரிய தொழுகை, ஆவிக்குரிய தொழுகை என்று சொல்லும்போது சரீர பிரகாரமான செய்கைகள் எதுவும் தொழுகையில் இருக்கக் கூடாது. குதித்தல் கைதட்டுதல், உயிரில்லா வாத்திய கருவிகளை இசைத்தல் இப்படிப்பட்ட தொழுகையை நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் எந்த ஒரு இடத்திலேயும் அவ்வாறு தொழுது கொண்டதாக புதிய ஏற்பாட்டில் நமக்கு சொல்லப்படவில்லை. அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டை பாடின பின்பு மத் 26:30 பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனை துதித்துப்பாடினார்கள் அப் 16:25 என்றே நாம் வாசிக்கிறோம். இதுவே ஆவிக்குரிய தொழுகை.

நாம் வாத்தியக் கருவிகளோடு தொழுது கொள்வது பாவமா? என்று சிலர் கேட்கின்றனர். வெளிப்படுத்தின விசேஷத்திலே ஒன்றையும் கூட்டக்கூடாது ஒன்றையும் குறைக்கக் கூடாது என்று 22:18–19 ல் வாசிக்கின்றோம். இப்படியிருக்க நாம் கூட்டலாமா? ஆவியை நாம் பார்த்திருக்கிறோமா? இல்லை. அப்படியிருக்கும் போது ஆவிக்குரிய தொழுகையில் தேவனுக்கு ஒப்பான விக்கிரகம், சிலுவை. அல்லது உயிரில்லா வாத்தியக்கருவிகள் வைத்து எப்படி தேவனைத் தொழுது கொள்ளலாம்.

**ஆமென்**

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை பிதாவின் மடியில் இருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் யோ 1:18 மேலும் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர் என்று 1தீமோ 6:16-ல் வாசிக்கின்றோம். இப்படி நாம் தேவனைக் காணாதிருக்கும் போது எப்படி அவருக்கு ஒப்பான ஒரு சொரூபத்தை உருவாக்கமுடியும் எனது அருமை சகோதரனே! சகோதரியே! இன்றே, இப்பொழுதே, உங்கள் இல்லத்தில் இருக்கிற தேவனுக்கு ஒப்பான விக்கிரகங்களை அகற்றுங்கள் அப்போது தேவன் உங்களோடு வந்து வாசம் செய்வார். கர்த்தர் தாமே உங்களை வழி நடத்துவாராக!

ஆமென்

★ சபை செய்திகள்:

பிப்ரவரி மாதம் 27-ம் தேதி சனிக்கிழமை மாலையில் சுவிசேஷக் கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது. கோவில்பட்டியிலிருந்து சகோ. பாஸ்கரன் அவர்கள் வந்து தேவ செய்தி அளித்தார்.

பிப்ரவரி மாதம் 28-ம் தேதி சகோ. நாகராஜன் குடும்பத்துடன் கிறிஸ்துவுக்குக் கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்' இவர்களுக்கு இப்பத்திரிகை ஆசிரியரும், வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை ஊழியருமான சகோ. அர்ச்சனன் அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார் பெண்களுக்கான சிறப்பு வேதப் பயிற்சிக் கூட்டம் வத்தலக்குண்டில் கணவாய்ப்பட்டி ரோடு, தண்ணீர் டாங்க் சமீபமுள்ள மார்னிங் ஸ்டார் ஆங்கிலப்பள்ளியில் மார்ச் மாதம் 24-ம் தேதி புதன்கிழமை காலை 10 மணிக்கு மேல் நடைபெறும்.

★ ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் யாக் 5:16

சகோ. நாகராஜனின் மகள் ராஜலட்சுமிக்கு கால் பூரண சுகமடைய
சகோ். மகாலிங்கம் மகள் முத்துப்பாண்டிக்கு சரீர சுகம் கிடைக்க
பொன்னர் என்ற சிறுவனுக்கு கண் பார்வை கிடைக்க

★ பரிசு:

பிப்ரவரி இதழில் வேத அறிவுப் போட்டியில் ஒருவரும் பரிசு பெறவில்லை (இப்போட்டியில் கலந்துகொண்ட 18 வாசர்களை உற்சாகப்படுத்துகின்றோம்)

கிறிஸ்துவின் வசனம்

★ பிப்ரவரி இதழின் விடைகள்:

1. சத்தியம் யோ 8:32
2. செவிகொடார் யோபு 35:13
3. அப்போஸ்தலர்களை 1 கொரி 4:9
4. லவோதிக்கேயா வெளி 3:14
5. கர்த்தருக்கு நீதி 12:22
6. தன் ஜீவனை
7. சிம்சோன்
8. முடியாது
9. ஆவியாயும், ஜீவனாயும்
10. இல்லை

★ இம்மாத வேத அறிவுப்போட்டி:

1. ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு என்ன இல்லை ?
2. ஐஸ்சுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று யார் சொன்னது ?
3. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் எவ்வளவு ?
4. அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால் சபையிலே அந்நிய பாஷையிலே பேசலாமா?
5. மோசேயின் தகப்பன் பெயர் என்ன?
6. சத்தியம் பண்ணலாமா?
7. அந்நியநுகத்திலே அவிசிவாசியுடன் விசுவாசிசப் பந்தம் கொள்ளலாமா?
8. மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புத்தகங்களை கொண்டுவந்து என்ன செய்தார்கள்?
9. எப்படி பாதாளத்தில் கிடத்தப்படுகிறார்கள்?
10. தேவனுக்கு நாம் உருவத்தை உண்டாக்கலாமா?

முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும், கடைஐந்திற்கு விடை மட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட் கார்டில் எழுதி இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும் சரியான விடை எழுது பவருக்கு பரிசு அனுப்பப்படும்.

★ வருந்துகிறேன்

திருமறை ஆசான் பத்திரிகை ஆசிரியரும், ஈரோடு கிறிஸ்துவின் சபை ஊழியருமான சகோ. E. Z. செல்வநாயகத்தை இழந்து வாடும் குடும் பத்தாருக்கும், வாசகர்களுக்கும், சபையார்களுக்கும் என்னுடைய வருத்தத்தை தெரிவிக்கிறேன்.
ஆசிரியர்

If undelivered please return to:
**THE EDITOR**
**Word of Christ, Post ox No. 5**
**BATLAGUNDU. 624 202 Anna Dt.**

**For Private Criculation only.**

Published by Batlagundu church of Christ and
Frinted at Shanthi Fress Batlagundu-624 202.